RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s22220

OPEN ACCESS

# கண்மணி குணசேகரனின் 'பூரணி பொற்கலை' சிறுகதைத் தொகுப்பில் வெளிப்படும் வழிபாடும் மரபுகளும்

**பி. சிவராமலெட்சுமி [அ, *], மு. புஷ்பகவல்லி [அ]**

[அ] தமிழாய்வு மையம், ஏ.பி.சி. மகாலட்சுமி மகளிர் கல்லூரி, (மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகதுடன் இணைவுபெற்றது), தூத்துக்குடி-628002, தமிழ்நாடு, இந்தியா

# Worship and Traditions that are revealed in Kanmani Gunasekaran's collection of short stories, "Poorani Porkalai"

**P. Sivaramalakshmi[a, *], M. Pushpagavalli [a]**

[a] Department of Tamil, A.P.C. Malaxmi College for Women, (Affiliated to Manonmaniam Sundaranar University), Thoothukudi-628002, Tamil Nadu, India

* Corresponding Author: psivaramalakshmi@gmail.com.

Received: 27.09.2022
Revised: 01-11-2022
Accepted: 06-11-2022
Published: 01-12-2022

Check for updates

**ABSTRACT**

Due to various transformations of images, the man who worshipped nature switched to idolatry, the worship of the deity. In his short stories, Kanmani Gunasekaran has written about the Guarding Deity worship followed by the people of The Centre region in the middle country, such as Villupuram, Cuddalore, and Vriddhachalam, in a variety of forms of worship such as Minor Deity worship, sepulchral stone worship, ancestor worship, etc. This thesis examines the manner in which the author has recorded the method of praying for the removal of his grievances, the method of offering objects in the temple if his request is fulfilled, the method of offering oblations to the guardian deities, and the traditional beliefs followed to ward off the spirits caused by the evil death, such as ghosts.

**Keywords:** Traditions, Worship, Kanmani Gunasekaran's, Poorani Porkalai, Short Stories

## முன்னுரை

மனிதன் தனக்கு மேல் ஒரு சக்தி இருப்பதாகவும் அது தன்னை முழு நேரமும் கண்காணிப்பதாகவும் நினைக்கிறான். தவறுகள் செய்யும்போது அச்சக்தி தன்னைத் தண்டிப்பதாகவும், குறைகளைப் போக்க வேண்டும்போது அக்குறைகளைக் களைந்து நிறைவான வாழ்வை அளிப்பதாகவும் நம்புகிறான். அதுவே பிற்காலத்தில் உருவ வழிபாடாக, குலதெய்வ வழிபாடாக, காவல் தெய்வ வழிபாடாக மாறியது. தான் முறையிட்ட, நினைத்த காரியம் நிறைவேறினால், தன்னுடைய வேண்டுதல்களை அல்லது வேண்டுதல் பொருள்களை இறைவன் சந்நிதியில் நிறைவேற்றி திருப்தி அடைகிறான். இவ்வாறாக கண்மணி குணசேகரன் தன் சிறுகதைகளில் பதிவிட்டுள்ள எல்லைக் காவல் தெய்வ வழிபாட்டு மரபுகள் ஆராயப்படுகிறது.

## வேண்டுதல்

இறைவன், நம்மை வழிநடத்தி செல்வதாக நம்பிய மனிதன், தனது பிரச்சினைகள் தீரவும் செல்வ வளம், உடல் ஆரோக்கியம் பெறவும் இறைவனிடம் மனம் உருகி வேண்டி நிற்பதுவே வேண்டுதல்.

“செய் பொருள் வாய்க்க எனச் செவி சார்த்துவோரும்

ஐ அமர் அடுக என அருச்சிப்போரும்

பாடுவார் பாணிச் சீரும் ஆடுவார் அரங்கத் தாளமும்” (Manikam, 2012)

என்ற பரிபாடலில் தலைவன் பொருள் வளமும் வெற்றி வாய்ப்பும் பெற வேண்டும் எனத் தலைவி இறைவனிடம் வேண்டி நிற்பதைச் சங்க இலக்கியம் எடுத்துரைக்கிறது.

தனமணி தன் மகளின் திருமணத்திற்காக வைத்திருந்த ஐந்து பவுன் தங்கச் சங்கிலியைக் காணவில்லை. தகவல் வெளியில் தெரிந்தால் தன் மகளின் திருமணம் தடைபடும் என்று நினைத்தவள், “விஷயம் வெளியில் தெரியாமல் உள்ளே போட்டு விழுங்கியபடி தனமணி நேரே வேடப்பர் கோயில் வந்தாள். நம்பிக்கையோடு எழுதிக் கட்டியவள் தெம்பாய்த் தான் இருந்தாள், பத்து நாள் கடந்த பிறகும் நம்பிக்கையோடு தான் திரும்பவும் மறுபடி கட்டினாள்”. என்ற ‘பிராது’ சிறுகதையின் மூலம் நடுநாட்டு வட்டார மக்கள் இறைவனிடம் தன் குறைகள் நீங்க சீட்டுக் கட்டி வேண்டிக் கொள்ளும் வழக்கம் இருந்ததை அறிய முடிகிறது (Kanmani Gunasekaran, 2010a).

இதுபோன்றே,

“பாலும் தெளிதேனும் பாகும் பருப்புமிவை

நாலும் கலந்துனக்கு நான் தருவேன் - கோலம்செய்

துங்கக் கரிமுகத்துத் தூமணியே நீ எனக்குச்

சங்கத் தமிழ் மூன்றும் தா”

நல்வழி கடவுள் வாழ்த்தில் ஔவையாரும் விநாயகப் பெருமானிடம், நான் உனக்குப் பால், தேன், வெல்லப்பாகு, பருப்பு ஆகிய நான்கினையும் கலந்து தருவேன், நீ எனக்குச் சங்கத் தமிழான இயல், இசை, நாடகம் ஆகிய முத்தமிழைத் தருவாயாக என இறைவன் முன் வேண்டுவதாக நல்வழியின் கடவுள் வாழ்த்துப் பாடல் அமைந்துள்ளது.

எந்த ஒரு காரியத்தைத் தொடங்கினாலும் முதலில் இறைவனிடம், எடுத்தக் காரியம் வெற்றி பெற வேண்டும் என வேண்டி வணங்கித் தொடங்கும் வழக்கமானது மக்களிடம் இன்றும் காணப்படுகிறது.

## நேர்த்திக்கடன்

வழிபாட்டின் போது தான் நினைத்த காரியம் நிறைவேறினால் பொருள்கள் (மணி, உண்டியல், அலங்கார விளக்கு) எடுத்து வைப்பதாகவோ அல்லது உயிர்ப்பலி இடுவதாகவோ நேர்ந்து கொள்வர். அவ்வாறு நேர்ந்து கொண்ட பொருள் அல்லது காரியம் நேர்த்திக்கடன் ஆகும். அதை உரிய காலத்தில் செய்யத் தவறினால் தெய்வக்குற்றம் ஏற்படும் என்றும் மக்கள் நம்பிக்கை கொண்டுள்ளனர்.

நேர்த்திக்கடன் - பிரார்த்தனை, இறைவனிடம் மக்கள் நம்பிக்கையுடன் வேண்டிக் கொள்ளும் பிரார்த்தனை முறையாக நேர்த்திக்கடன் அமைந்துள்ளதை அகராதி விளக்குகிறது.

வேண்டுதலை மறந்த அமுதாவிற்கு பங்குனி உத்திரத்திற்கு இரண்டு நாளுக்கு முன்புதான் நினைவு வந்தது. “நாளைக்கு மறாநாளு பங்குனி உத்திரம், தம்பி கீழ விழுந்தப்ப குதுர செஞ்சி பங்குனி உத்திரத்துல வைக்கிறன்னு செம்பையனாரிடம் வேண்டிக் கொண்டேன் அதுவும் இந்தப் பங்குனி உத்திரத்துக்கே” என்று தன் கணவரை மண்குதிரை வாங்கிவர அவசரப்படுத்துகிறாள் (Manikam, 2012). என்ற ‘வாகனம்’ சிறுகதையின் மூலம், தாய் தன் மகன், உடல் நலம் பெற வேண்டும். அவ்வாறு உடல் நலம் பெற்றால் இன்னது செய்கிறேன் என்று இறைவனிடம் வேண்டியதுடன் அவ்வேண்டுதலை மறக்காமல் உரிய காலத்தில் நிறைவேற்றிவிட வேண்டும், தவற விடக் கூடாது என்ற மக்களின் எண்ணம் வெளிப்படுகிறது.

“கரு வயிறு உறுக எனக் கடம்படுவோரும்”

முருகனைத் தொழுது வேண்டி நிற்கும் பெண்கள் பலருள், நெடுங்காலமாகக் குழந்தை இல்லாத சிலர், இனியேனும் என் வயிற்றில் கருப்பம் உருவாக வேண்டும், அவ்வாறு உருவாகினால் இன்னது தருவோம் என்று வேண்டி நிற்கின்றனர் (Manikam, 2012). என்ற பரிபாடல் வழியாக இறைவனிடம், வேண்டுதல் நிறைவேறினால் தனது நேர்த்திக்கடனை நிறைவேற்றுவதாகப் பெண்கள் வேண்டி நிற்பதை அறிய முடிகிறது.

(பொருள்: கடம்படுவோர்- இறைவனுக்குப் பொருள்களை நேர்ந்து கொள்ளுதல்.) (Manikam, 2012)

இன்றைய நாள்களிலும் வீட்டில் உள்ள நபர்கள் யாரேனும், உடல்நலம் இன்மையால் துன்பப்பட்டால் வீட்டில் உள்ள பெரியவர்கள் சாமி குத்தமாக இருக்கும் எதுவும் நேர்த்திக்கடன் பாக்கியுள்ளதா? என்று கேட்பார்கள். இது மக்களின் நாகரிக வளர்ச்சியிலும், இறைவன் மீதும் நேர்த்திக்கடன் மீதும் நம்பிக்கை இருப்பதை வெளிக்காட்டுகிறது.

## படையல்

தங்களை வாழவைக்கும் தெய்வங்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாகக் காவல் தெய்வங்களுக்கான சிறப்பு வழிபாட்டின் போது சோறு, கறி, பலியிட்ட ஆடு போன்றவற்றைப் படையல் இட்டுப் பூசைகள் செய்வது சிறு தெய்வ வழிபாட்டில் முக்கிய இடம் பெறுகிறது.

“செங்கள விருப்போடு கூலமுற்றிய

உருவச் செந்தினை குருதியொடு தூஉய்

மண்ணுறு முரசங் கண்பெயர்த்து”

சங்க இலக்கியத்தில் இறை வழிபாட்டின் போது தினைச்சோற்றுடன் இரத்தத்தைக் கலந்து படையலிட்டு வழிபட்டதைக் காண முடிகிறது.

தமுக்கு வீரனையும் கவனிங்க, என்று அய்யனார் முன் படையல் இலையில் குத்தாய் வறுத்த கறியை அள்ளி வைத்துக் கொண்டிருந்த நவாப் கூறியதும். போதையில் இருந்த அக்குவெட்டி சோறையும் கறியையும் வாரி வாரிப் போட்டான் (Kanmani Gunasekaran, 2010b). இலையில் இருந்த கறித்துண்டுகளைப் பார்த்துவிட்டு சந்தேகமாய் நவாப் கேட்டான்,

“ஏன்டா பன்னிக்கறியில்ல”

“அட நீதாண்டா தமக்குவீரன நெல்ல கவனிக்கணும்னு சொன்ன அதான் போயும் போயும் பன்னிக்கறியான்னு ஆட்டுக்கறிக் கொழம்ப எடுத்தாந்தேன்.” மீதிக் கறியையும் அள்ளி வைத்து, இடுப்பில் செருகியிருந்த ஒரு பாட்டிலையும் எடுத்து மூடியைத் திருகி வைத்தான். கறியோடு சரக்கு. தமக்கு வீரனுக்கு மட்டுமல்ல, பக்கத்தில் எச்சில் ஒழுகியபடி நின்ற நாய்க்கும் நல்ல வாட்டு.” என்று, அக்குவெட்டியின் செயலிலிருந்து இறைவனை வழிபடுவதற்குப் படையல் இட்டு வழிபடும் மரபும் நடுநாட்டு வட்டார மக்கள் பின்பற்றுகின்றனர் என்பது, ‘தமுக்கு வீரன்’ சிறுகதையிலிருந்து அறிய முடிகிறது.

அகநானூற்றில்,

“கள்ளும் கண்ணியும் கையுறையாக

நிலைக்கோட்டு வெள்ளை நாள்செவிக் கிடாஅய்

நிலைத்துறைக் கடவுட்கு உளப்பட ஓச்சி” (Angamuthu Muthaliyar, 2011)

தலைவியின் உடல்நிலை சரியில்லாததால் தாய், தெய்வக்குற்றம் என எண்ணி , நெய்தல் நிலத் தெய்வமான வருணபகவானுக்குக் கள்ளும் மலர்மாலையும் ஆட்டுக்கிடாயும் படைத்து வணங்குகிறாள்.

என்பதிலிருந்து சங்க இலக்கியக் காலங்களில் இருந்தே இறைவனுக்குப் படையல் இட்டு வழிபடும் முறை இருந்ததை அறிய முடிகிறது.

இன்றும் கிராமப்புற ஊர்த்தெய்வங்களுக்கு இரவு நேரக் கொடைக் காலங்களில் படையல் இட்டு வழிபட்டுப் பின்னர் அப்படையலைப் பிரசாதமாக மக்கள் அனைவரும் அமர்ந்து உண்டு விட்டுச் செல்லும் வழக்கம் நடைமுறையில் உள்ளது.

## நம்பிக்கை

மக்களுக்குத் தெய்வங்களின் மீது எவ்வளவு நம்பிக்கை இருக்கிறதோ, அதே அளவு ஆவிகள் மீதும் உண்டு. வாழ்வில் நிறைவேறாத ஆசைகளுடன் இறப்பவர்கள் பேய்களாக, ஆவிகளாக வலம் வருவதாக அவர்கள் நம்புகின்றனர்.

“விழுது நிணத்தை விழுங்கியிட்டு

வெண்டலை மாலை விரவப்பூட்டிக்

கழுதுதன் பிள்ளையைக் காளியென்று

பேரிட்டுச் சீருடைத் தாவளர்த்துப்

புழுதி துடைத்து முலைகொடுத்துப்

போயின தாயை வரவுகாணா

தழுதுறங் கும்புறங் காட்டில் ஆடும்

அப்பன் இடந்திரு வாலங்காடே”

பேய் சுடுகாட்டில் குழந்தை பெற்று அதற்குப் பெயரிட்டு தாய்ப்பாலும் நிணமும் ஊட்டிப் பேணி வளர்க்கிறது. குழந்தை தூங்கும் போது சிறிது நேரம் வெளியில் செல்கிறது. எனக் காரைக்கால் அம்மையார் திரு ஆலங்காட்டு மூத்த திருப்பதிகத்தில் பேய்கள் மனிதர்களைப் போல சுடுகாட்டில் வாழ்ந்து வருவதாகப் பதிவிட்டுள்ளார்.

கனகசபை தன் காதல் நிறைவேறாததால் பூச்சிமருந்து குடித்து இறந்து விட்டான். ஆவியான பின் பெண்களைப் பிடித்துத் தொல்லை செய்கிறான் அப்படி ஒரு பெண்ணைப் பிடித்தவன் பூசாரியால் விரட்டப்படுகிறான்.

“யார் நீ”

“நாந்தான் கனகசபை”

“எதுக்கு வந்த”

“எதுக்குடா வருவன்” கட கடவென சிரிக்கிறாள்.

“சிருப்பா சிரிக்கிற ஓஞ் சிருப்பை அடக்கறன்” எருக்கங் கலியை எடுத்து விளாசுகிறான்.

“நாம் போறன் நாம் போறன்...” வலி தாங்காமல் ஓடுகிறாள்.”

ஆணியில் மயிரைச் சுற்றி ஆலமரத்தில் அடித்து விட்டு திரும்புகிறார்கள். ஆலம்பட்டை செதில்களில் முதுகை உராய்ந்தபடி ஆணியின் பிடியில் கனகசபை.”

மக்களுக்கு ஆவிகள் மீது நம்பிக்கை இருந்ததையும் அதை விரட்ட சாமியாடிகளை அழைத்துப் பேய் ஓட்டுகிறார்கள் என்பதையும் ஆணிகள் பேய் விரட்டப் பயன்படும் கருவியாக இருந்ததையும் கண்மணி குணசேகரன் ‘ஆணிகளின் கதை' சிறுகதையில் பதிவிட்டுள்ளார் (Kanmani Gunasekaran, 2010c).

நற்றிணையில்,

“நேரிழை

கடும்புடைக் கடுஞ்சூல் நம்குடிக் குதவி

நெய்யோ டிமைக்கும் ஐயவித் திரள்காழ்

இலங்குநகர் விளங்கக் கிடந்தோட்”

பிறந்த குழந்தையைப் பேயிடம் இருந்து பாதுகாக்க வீடு முழுவதும் நெய் உடன் ஐயவி எனப்படும் வெண்சிறுகடுகைக் கலந்து பூசுவது சங்க கால மக்களிடம் இருந்த பேய் விரட்டும் மரபாக இருந்ததை அறிய முடிகிறது.

இன்றைய காலகட்டத்தில் உளவியல் ரீதியான சில பிரச்சினைகளுக்கு மருத்துவரை அணுகாமல், பேய், பிசாசு என்று, ஏமாற்றும் சாமியாரிடம் சிக்கி பணம் பொருள் இழக்கும் நிலையும் உள்ளது. நம்பிக்கை எனும் பெயரில் தாங்கள் ஏமாறாத வண்ணம் கவனத்துடன் சுதாரித்து வாழ வேண்டிய நிலைப்பாட்டையே இன்றைய மக்கள் பெற்றுள்ளனர்.

## முடிவுரை

நடுநாட்டு வட்டார மக்கள், காவல் தெய்வத்திடம் தங்கள் வேண்டுதல்களைக் கூறும் முறைகளையும் நேர்த்திக்கடன் பொருள்களை உரிய காலத்தில் செய்ய வேண்டும் என்ற எண்ணத்தையும் இறைவனுக்கு நன்றி உணர்வால் படையல் இட்டு வழிபடும் வழிபாட்டு முறைகளையும் ஆவிகள் மீதான நம்பிக்கையையும் ஆவியை விரட்டப் பின்பற்றிய மரபார்ந்த முறைகளையும் காண முடிகிறது. காலம் காலமாக மக்கள் பின்பற்றும் வழிபாட்டு முறைகளால், மனிதன் தன்னைத்தானே நேர்வழிப்படுத்தவும், நம்பிக்கையுடன் காரியங்கள் வெற்றி பெற முயற்சிக்கவும், உளவியல் ரீதியாக தன் மன வலிமையை அதிகரிக்கவும், நேர்மறையான எண்ண அலைகள் நேர்மறையான வாழ்வளிக்கும் என்ற எண்ண உணர்வையும் உருவாக்க முடியும் என்பதை அறிய முடிகிறது.

## References


Angamuthu Muthaliyar, T.N. (2011) Agananuru Minimadai Pavalam, Sai Vikram Publications, Chennai, India.

Kanmani Gunasekaran, (2010a) Pradhu Sirukathai, Tamilni Pathippagam, Chennai, India.

Kanmani Gunasekaran, (2010b) Thamaku Veeran, Tamilni Pathippagam, Chennai, India.

Kanmani Gunasekaran, (2010c) Aanikalin Sirukathai, Tamilni Pathippagam, Chennai, India.

Manikam, A. (2012) Paripadal Moolamum Uraiyum, Arignar Anna Noorpathippu Kalagam, Chennai, India.



**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Authors have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author(s) 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License